**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 102/2013**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 9 |
| Name (திரு/திருமதி) | : மாணிக்கம் |
| Father's Name/ Husband's Name | : ஆறுமுகம் |
| Village & Taluk | : ஈரோடு |
| Calling | : மோட்டார் வாகன ஆய்வாளர் |
| Age | : 59 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.06.2026**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை – 1 ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.12.2010 அன்று நான் திண்டிவனம் மோட்டார் வாகன அலுவலகத்தில் பணியில் இருந்த போது அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் இருந்து கடந்த 22.12.2010 அன்று பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின் படி மேற்குறிப்பிட்ட காவல் நிலையத்தின் நிலைய குற்ற எண் 355/2010 என்ற வழக்கில் தொடர்புடைய TML 7044 கனரக பள்ளி வாகனத்தை எனது அலுவலகத்தில் வைத்து விபத்து ஆய்வு செய்தேன். வாகன ஓட்டுனரின் ஓட்டுநர் உரிமம் வாகனத்தின் பதிவு சான்று, காப்பீட்டு சான்று, தகுதி சான்று, அனுமதி சீட்டு ஆகியவைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவைகள் சரியாக இருந்தது. வாகனத்தில் என்த ஒரு சேதங்களும் காணப்படவில்லை. வாகனத்தின் கால் தடை திறன் 70% காணப்பட்டது. கை தடை இயங்கவில்லை. வாகனத்தின் பிரேக் சிஸ்டம், ஸ்டியரிங் மற்றும டயர்கள் நல்ல நிலையில் இருந்தன. இந்த விபத்தானது எந்த ஒரு இயந்திர கோளாரினாலும் ஏற்படவில்லை என கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ,சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவலர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. விபத்து நடந்தாக சொல்லப்படும் தேதியிலிருந்து சுமார் நான்கு நாட்கள் கழித்து தான் மேற்படி வாகனம் ஆய்வுக்கு உட்படுத்தபட்டது என்றால் சரிதான். வாகனத்தை சம்பவ இடத்தில் வைத்து ஆய்வு செய்திருந்தால் டயர் மார்க்குகளை

வைத்து விபத்து எந்த வாகனத்தால் ஏற்பட்டது என்பதை குறிப்பிட்டிருக்க இயலும் என்றால் சம்பவத்தன்றே ஆய்வு மேற்கொண்டிருந்தால் குறிப்பிட்டிருக்க இயலும். நான் ஆய்வு செய்த வாகனத்தில் கதவுகள் இருந்ததா என்பதை ஆய்வறிக்கையில் குறிப்பிடவில்லை எனறால் பள்ளி வாகனம் என்றாலே கதவுகள் இருக்கும், பொதுவாக சேதங்களை மட்டும தான் ஆய்வறிக்கையில் குறிப்பிடுவது வழக்கம். கதவில் சேதங்கள் காணப்பட்டிருந்தால் அதனை ஆய்வறிக்கையில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரிதான். காவலர்கள் என்னை அழைப்பானை சார்வு செய்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது அலுவலகத்தில் வைத்து வாகனத்தை ஒப்படைத்த அன்று விசாரனை செய்தனர். நான் சொன்ன சங்கதிகளை என் முன்னிலையில் வாக்கு மூலமாக பதிவு செய்தனரா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

| |
|---|
| என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.<br>Sd/–B.Vidhya<br>குற்றவியல் நீதித்துறை நடுவர்,<br>செஞ்சி. |